**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.1255/ஆ5/2024, நாள். 25.10.2024**

*****

பொருள் பள்ளிக் கல்வி – மாணவர்களின் பண்பாடு மற்றும் ஒழுக்கத்தினை மேம்படுத்துதல் – உலகப் பொதுமறை திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட நன்னெறி கல்விப் பாடத்திட்டம் – மாணவர்களுக்கு உரிய பயிற்சி வழங்கி செயல்படுத்திட அறிவுரை வழங்குதல் – தொடர்பாக

பார்வை சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.19528/எம்1/ இ1/2024, நாள். 15.10.2024

*****

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில், பள்ளிகளில் திருக்குறளை நாள் தோறும் வழிபாட்டு கூட்டத்தில் பொருளுடன் கூறவேண்டும். திருக்குறளை சார்ந்த சிறுகதைகளை ஆசிரியர் கூட்டத்தில் மாணவர்களுக்கு எடுத்துக் கூறுதல் வேண்டும். சென்னை மாநகர காவல் துறையினரால் "குறள்வழி போதை விழிப்புணர்வு சிறுகதைகள்" என்ற தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது.

| வ. எண். | வாரம் | கதை |
|---|---|---|
| 1 | வாரம் 1 | மனமயக்கம் |
| 2 | வாரம் 2 | போதை வலையில் வீரா |
| 3 | வாரம் 3 | தடம் மாறிய பாதை |
| 4 | வாரம் 4 | ஆசிரியரின் பரிவு |
| 5 | வாரம் 5 | நட்பினால் நன்மை / நன்மை தரும் தீமை |
| 6 | வாரம் 6 | சட்டத்தின் சாட்டை |
| 7 | வாரம் 7 | பெற்றோரின் அன்பு |
| 8 | வாரம் 8 | மருத்துவ உதவி |
| 9 | வாரம் 9 | முயற்சி திருவினையாக்கும் |

மேற்கண்ட சிறுகதைகளை தவறாது வாரம் தோறும் தமிழாசிரியர் மட்டும் அல்லாமல் அனைத்து வகுப்பு பொறுப்பு ஆசிரியர்களும் வகுப்பறையில் மாணவர்கள் இக்கதைகள் கூறவும் அதை சார்ந்த எழுத்து மற்றும் ஓவிய வடிவங்களில் தெரிந்து கொண்டவற்றை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பாக ANTI DRUG CLUB செயல்பாடாக மன்றங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பாடவேளையில் மற்றும் சிறப்பு செயல்பாடாகவும் செயல்படுத்தி சிறப்பான கட்டுரைகள் மற்றும் ஓவியங்கள் தேர்வு செய்து பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் சான்றிதழ்கள் வழங்கலாம். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பள்ளி அளவில் 14.11.2024 அன்று சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும்.

மேலும், இச்செயல்கள் செயல்படுத்தப்படுவதை பள்ளித் தலைமையாசிரியர்கள் உறுதி செய்திட வேண்டும். பள்ளிப்பார்வை மற்றும் ஆண்டாய்வின் போது செயல்பாடுகளை ஆய்வு செய்திட மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – கதை தொகுப்பு

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல்–

1. சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநர்
   அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள்,
   அனைத்து அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம். (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)